# வெளியே சொல்ல வெட்கம் இல்லையா?

## தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சி புரிய இயலாதாம்!

## இந்த நிலையில் இந்திக்கு ஆதிக்கமாம்!

### திருச்சி அலுவலாளர் தமிழ் அறியா மக்களா?


Phone No. 4502
விலை அரை அணா]

Regd. No. M. 5458
[இலங்கை 6 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 ] சென்னை (17—10—49) வெளியூர் (18—10—49) | இதழ் 67


# சட்டம் செல்லாக் காசாகிறதே!

### பக்தவத்சலனாரின் பரிதாபக் கூற்று

சென்னை மராமதது இலாகா அமைச்சர் தோழர் எம். பக்தவத்சலனார் கோயம்புத்தூரில் ஒரு கூட்டத்தில் பேசுகையில்,

"சென்னை அரசாங்கம் தாய மொழியிலேயே அரசாஙக அலுவலகளை நடத்திவர ஆவல் கொண்டிருக்கிறது. அதை அனுசரித்துத் திருச்சியில் பரீட்சார்ததமாக அரசாங்க விஷயங்கள் எல்லாம தமிழிலேயே எழுதப்படடு வருகின்றன. இதனுல் ஏற்படட அனுபவததைக கொணடு பார்ககையில் இநத முறையைப் பிற மாவட்டஙகளுககுப் பரப்பதைரியமவரவில்லை. அரசாஙக அலுவலாளர்களும பிற அலுவலாளரும் தமிழில் எழுத இன்னும் நன்ருகக கறறுக்கொள்ளாமலே இருககினறனர்"

என்று கூறியுள்ளார்

தமிழில் கடிதப போக்குவரத்து நடத்த, தமிழிலேயே அலுவல்களை நடத்த, அரசாங்க அலுவலாளருக்குத் தெரியவில்லை. சோதனை திருப்தியளிக்கவில்லை. எங்கே இந்தக்கூத்து? தமிழ் நாட்டில, தமிழ்நாட்டின் நடுநாயகமாக விளங்கும் திருச்சி மாவட்டத்தில்.

திருச்சியில் அரசாங்க அலுவலாளராயுள்ளவர்கள் அனைவரும் ஆங்கிலநாட்டிலிருந்து வந்தவர்களா? அல்லது வடநாட்டு இறக்குமதிகளா? இல்லை தமிழர்கள்தான். பின் ஏன் தமிழில் எழுதும் வேலை திருபதிகரமாக நடைபெறவில்லை?

திருச்சியிலுள்ள பெரிய அதிகாரிகள் யார்? தமிழில் சரிவர திருபதியளிக்கக்கூடிய வகையில் எழுதத் தெரியாதவர்கள் யார்? ஏன இந்த நிலை வந்தது தமிழ நாட்டில்? என்பவைகளை அரசாங்கம் கவனித்ததா?

தமிழில் காரியங்களைச்செய்து, அதன மூலம் தமிழுக்குப பெருமை அளித்து விடாமல், அதனைக்குலைக்க, சோதனையில அரசாங்கம் திருபதி கொள்ளாத அளவுக்குச சதி செய்யும் கூட்டம் அங்கிருக்கிறதா? என்பதை அரசாங்கம் கவனித்ததா?

தமிழர்களாகப் பிறந்து, தமிழ் மொழியைத் தாய் மொழியாகக கொண்டவர்களுக்கு, அரசாங்க விஷயங்கள் தமிழில் எழுதச் சரிவரத்தெரியவில்லை என்பது மானக்கேடல்லவா? இப்படியும இருக்க முடியுமா? இதில் ஏதோ சூழ்ச்சி அடங்கியிருக்கிறதென்பது புலனாக வில்லையா? அரசாங்கம் இவற்றையெல்லாம் கவனித்ததா?

"சோதனை செய்து பார்த்தோம; திருப்தியளிக்கவில்லை ஆகையால் இம்முறையைக் கைவிடுகின்றோம். மற்ற மாவட்டங்களுக்கும் இதனைப் பரப்ப முடியாமலிருக்கின்றோம்" என்று அமைச்சர் கூறிவிட்டால், அரசாங்கம் அறிவித்து விட்டால், தமிழ் [illegible] மாநிலத்தின் அரசாங்க மொழியாகக் கூடாதென்னும் கருத்துக் கொண்டுள்ள சூழ்ச்சிக்காரர்கள் வெற்றி அடைந்து விட்டார்கள் என்றே கூறுதல் வேண்டும். அரசாங்க ஆதரவில் அவர்கள் தமிழை இன்னும் தொலைத்து விட முடியும் ஆனால், அரசாங்கம் இந்த முறையைக் கைவிட்டு, சோதனை திருபதியளிக்க வில்லை என்றுகூறிக்கொண்டிராமல் தமிழ்லஎழுதத்தெரியாதவர்களுககு சம்பள உயர்வு நிறுத்தப்படும், உயர்ந்த உத்தியோகங்களுக்கு உயரும் உரிமை நிறுத்தபபடும் என்றெல்லாம் கண்டிப்பான கட்டளைகள் பிறப்பித்தால், ஏன் தமிழில் காரியங்கள் நடைபெறு என்று கேட்கின்றோம்.

தமிழ்நாட்டைச் சேர்ந்திராத பெஸ்கி, கால்டுவெல் போன்றவர்கள் தமிழில் அகராதி, இலக்கணம் முதலியவை எழுதும் அளவுக்குத் தமிழைப் பயின்று போற்றிய இந்த நாட்டிலே, தமிழாகளுக்குத தமிழ் எழுதத தெரியவில்லை என்பது தமிழா களுக்கும், தமிழ்நாட்டிற்கும், அமைச்சர்களுக்கும், சென்னை மாநில அரசாங்கத்திற்கும் பெரும் மானக்கேட்டை யுண்டு பண்ணும் செயதியாகும்.

அரசாங்கத்தா உடனடியாக இதுவிஷயத்தில் தக்க நடவடிக்கை எடுக்காவிடின், தமிழுக்கு ஆதரவு தருவதாக அரசாங்கம் கூறிக்கொண்டிருப்பது வெறும் கண்துடைப்பு வேலை என்றே கருதவேண்டியிருக்கும் மேலும் கல்வி அமைச்சா பதவி ஏற்றிருப்பவர் தமிழ்நாடு முழுவதும் அரசாங்கச் செலவில் சுற்றிவந்து சமஸ்கிருதப் பிரசாரம் செய்துவருவதை அரசாங்கம் அனுமதித்துக்கொண்டிருப்பதையும் கவனித்தால், தமிழுக்கு ஆதரவு தருவதாக அறிக்கைகளில் கூறிக்கொண்டு உள்ளூற தமிழைக் குலைத்துச் சமஸ்கிருதத்தைப் பரப்பும் வேலையே நடைபெற அரசாங்கம் அனுமதித்துக்கொண்டிருக்கிறது என்றே தமிழ் மக்கள் எண்ணவேண்டியிருக்கும் என்பதை அரசாங்கம் உணருமா?

## செய்வன திருந்தச் செய்!

—(0)—

## மதுவிலக்குச் சட்டம் மீறிய வழக்கில் நீதிபதியின் தீர்ப்பு

நமது சென்னை அரசியலார், தாம் செய்திருக்கும் அரும பெரும் செயல்களுள் மதுவிலக்கு சட்டமே மகத்தானது, மற்ற எந்த மாகாணமும் செய்யத்துணியாதது என்றெல்லாம் [illegible] துண்டு. மந்திரிகள் முதற்கொண்டு சட்டசபை உறுப்பினர் உட்பட ஆளவந்தார் அத்தனை பேரும், தாம் செல்லுமிடங்களிலெல்லாம் இதையே அடிக்கடி சுட்டிக் காட்டுகிறார்கள். 'வரிச் சுமை அதிகமாகிறதே' என்று மக்கள் கேட்டால், "என்ன செய்வது மதுவிலக்கால் 17 கோடி வருவாய் குறைந்துவிட்டது." என்று பதில் சொல்லுகிறார்கள். நாட்டின் பொருளாதார சீர்கேடுகளுக்கெல்லாம் மதுவிலக்கைக் காரணமாகக் காட்டுகின்றனர் ஆட்சியாளர்.

ஆனால் அப்படிப்பட்ட மதுவிலக்குச் சட்டம் எந்த அளவுக்குப் பலன் விளைவித்திருக்கிறது என்பதைப் பாருங்கள். பலவிடங்களில் மதுவிலக்குச் சட்டம் மீறப்படுகிறது. சட்டத்தைச் சட்டைசெய்யாத குடியர்களும் இருக்கின்றனர் சட்டததை வெற்றிகரமாக அமுல்நடத்த ஆளவந்தாகளால் முடியவில்லை. இந் நிலையைக் குறிப்பிட்டு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஏ. எஸ். பி. அய்யர் அவாகள் சமீபத்தில் அளித்திருக்கும் ஒரு தீரபபைக் கீழே தருகிறோம்

"மதுவிலக்கு சட்டத்தை அமுல் நடத்துவதில் குற்றவாளிகளுக்குப் பலமான தண்டனை விதிக்க வேண்டும். அல்லது சட்டத்தையே ரத்து செய்துவிட வேண்டும். அப்பொழுததான் எதிர்பாாக்கும பலன் கிட்டும். பெயரளவுக்கு அபராதம் விதித்து அதை ஒரு வரி மாதிரி வசூலிபபதில பயனில்லை குடிகாரர்களும் அந்த வரியைச் சலபத்தில் செலுத்திவிடுவார்கள்"

இது, மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் அனந்தப்பூர் ஜில்லாவில் 4 பேர்களின்மீது தொடரப்பட்ட ஒரு வழக்கில் நீதிபதி அளித்துள்ள தீர்ப்பு. "செய்வன திருந்தச் செய்" என்று அறிவுறுததுகிறார் அந்த நீதிபதி. ஆனால் நம் ஆட்சியாளரோ வெனில் எதையும் திருந்தச் செய்வதைவிட, விளம்பரம்பெற வீண் ஆரவாரங்களிலீடுபடுகின்றனா.

## 'மடத்தனம்!'

"காஷ்மீர் பிரச்னை தீராதிருககும்வரை, இந்தியாவிலோ பாகிஸ்தானிலோ பொருளாதார முன்னேற்ற திட்டங்களுக்காக அமெரிக்கப் பணத்தை மூலதனமாகப் போடுவது மடத்தனம்."

—நியூயார்க் வொர்ல்ட் டெலிகிராம்.

## வட நாடு காட்டும் வழி

### வளர்ச்சித் திட்டங்களுக்குப் பணமளிக்க மறுப்பு

சில முக்கியமான வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றிவைக்கச் சென்னை அரசாங்கத்துக்குப் பணம் இன்றியமையாத் தேவையாக இருக்கின்றபடியால், மத்திய அரசாங்கத்திடம் சென்னை 6 கோடி ரூபாய் கடன் கேட்டிருந்ததென்று தெரிகிறது.

ஆனால், மத்திய அரசாங்கத்தினர், வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றி வைப்பதற்காகச் சென்னைக்கு 6 கோடி ரூபாய கடன் கொடுத்துதவ மனமின்றிக் கொடுக்க மறுத்துவிட்டது. அதுமட்டுமன்று. அதிக உணவு உற்பத்தித் திட்டங்கள் என்ற இனத்தில் கொடுத்துவந்த உதவித் தொகையை 5 கோடியிலிருந்து 4 கோடியாகக் குறைத்துவிட்டது.

ஆனால் இதே சமயத்தில் இந்தியாவில் பயிர்த் தொழிலை வளர்ச்சியடையச் செய்து, இந்திய நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்படாதபடி செய்வதற்காக வென்று உலக பாங்கியில் வாங்கிய பெருங்கடன் தொகை என்னவாயிற்று? அதில் சென்னை மாகாணம் அடைந்த பங்கென்ன? இரயில்வே வளர்ச்சிக்காக வாங்கிய கடனுகிய பெருந்தொகை என்னவாயிற்று? இத்தொகையிலிருந்து, சென்னை மாகாண ரயில்வே என்னென்ன வளர்ச்சியடைந்திருக்கிறது? அல்லது வளர்ச்சிக்குரிய திட்டங்கள் என்னென்ன போடப்பட்டிருக்கின்றன?

உண்மையிலே மத்திய அரசாங்கப பீடத்தில் அமாந்துள்ள ஆட்சியாளாகள், தென் இந்தியாவை மாற்ருந்தாய் அன்புடன் கவனித்து வருகிறாகள் என்று கூறினால, இதிலதவறிருக்க முடியாது. தமிழ் நாட்டைச்சோந்த ஒருவரைத் தலைமைப் பீடத்தில வைத்துக்கொண்டு, அமைச்சா அவையிலும், சிலரை வைத்துக் கொண்டு, வடவா ஒரு சிலா தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தி, சென்னைமாகாண விஷயததில் தக்கவாறு அக்கறை செலுத்தவில்லை என்றே கூற வேண்டியிருக்கிறது.

உணவுபபஞ்சம் தலைவிரித்தாடும் இந்நாளில், தமிழ் நாட்டில அதிக உணவு உறபத்தித் திட்டச்சலுகையில் ஒரு கோடி ரூபாய் குறைபபது நடுவழியில கழுத்தறுத்துப்போடும்செயலாக வன்றோ இருக்கிறது. அதே போன்று, ஓா ஆறுகோடி ரூபாய் கடன் தாத்தயாராக இலலை பெருந்தொகையைஉலகபாங்கியிலிருநது வாங்கிவைத்துக்கொண்டிருக்கும் மததிய அரசாங்கம்!

இதிலிருந்து மத்திய அரசாங்கத் தொடாபு நமக்கு எத்தகைய பலன்களை நல்க வல்லது என்பது தெரிகிறதல்லவா?

மாலை மணி

சென்னை 17—10—49 திங்கட்கிழமை

# திட்டம்! திட்டம்!! திட்டமேதான்!!!

**"உணவு உற்பத்தியின் நிலை, இன்று இருப்பது போன்றே இருந்தால், 1951-ம் ஆண்டு டிசம்பர் திங்களுக்குப் பிறகு, இந்த மாகாண மக்களின் நிலை படுமோசமாகவும், பரிதாபகரமாகவும் போய்விடும் என்று நான் அஞ்சுகிறேன்''**

என்று சென்னைப் பிரதமர் தோழர் குமாரசாமி ராஜா, மாகாண உணவு ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார்.

மத்திய அரசாங்க மந்திரிகளும் சரி, மாகாண அரசாங்க மந்திரிகளும் சரி, உணவைப் பொறுத்தவரையில், இருக்கின்ற நிலைமையை விளக்கிக் கூறுவதிலே காலங்கடத்தி வருகின்றனரே யன்றி, இருக்கும் நிலைமையை மாற்றி அமைக்கக் கவலை கொண்டதாகவே தெரியவில்லை.

"உணவு மிக உற்பத்தி செய்'' என்ற முழக்கத்தை, விண்ணை முட்டும் அளவுக்கு எழுப்பிக் காட்டுகின்றனர். உணவைப் பெருக்கக் கால்வாய்கள் வெட்டப்போவதாகவும், ஏரிகள் சீர்திருத்தப் போவதாகவும், குளங்கள் காணப்போவதாகவும், கிணறுகள் தோண்டப்போவதாகவும், அணைக்கட்டுகள் கட்டப் போவதாகவும் அடிக்கடி கூறி வருகின்றனர் அரசியலார். அவைகளைப் பற்றிய சப்தம் இருக்கும் அளவுக்குச் சத்தான காரியங்கள் உருப்பெறப் பாடில்லை.

பஞ்சமும் -பிணியும்-பசியும் பட்டினியும் தலைவிரித்தாடத் தொடங்கிய காலத்திலிருந்து உணவைப் பெருக்கத் திட்டம் தீட்டிக் கொண்டிருக்கின்றனர்; தீட்டிக்கொண்டே தானிருக்கின்றனர். உணவு நெருக்கடியைத் தீர்க்க அரசியலார் கையாண்ட வழி திட்டம்—திட்டம்—திட்டம் தீட்டுவதேதான்!

பகையையும், பகையுணர்ச்சியையும் அழிக்கப் போர் தொடுப்பதுபோல, பசியையும்—பட்டினியையும் அடியோடு அழித்தொழிக்கப் போராட்ட முறையைத் துவக்கப்போகிறேன் என்றார், இந்திய உணவு மந்திரி, சில நாட்களுக்கு முன். மந்திரி ஜயராம்தாஸ் தௌலத்ராம், 'ஜெனரலிஸிமோ' ஜயராமதாஸ் தௌலத்ராம் ஆனார். வட்டுடை அணிந்து, வாளேந்திப் போராகக் கோலம் பூண்டு களம் நண்ணினார், "நொண்டிக்கப் பித்தான சண்டைக்கு வருகிறேன், போடடா பீரங்கி'' என்ற கதையாகத்தான் முடிந்தது முடிவு. களத்திலே கனம் மந்திரி வெற்றி காணவில்லை. பஞ்சமும்—பட்டினியும் முன்னை விட அதிகமாகத் தாண்டவமாட ஆரம்பித்துவிட்டன.

இதுவரையிலும் தீட்டப்பட்ட திட்டங்கள் போதாவென்று, இப்பொழுது இரண்டாண்டுத் திட்டங்கள் தீட்டுகிறார்களாம், உணவு நெருக்கடி தீர்ந்துவிடும் என்று கருதிக்கொண்டு! இதுவரையில் தீட்டப்பட்ட திட்டங்கள் அளித்த பலனைத்தான் இப்பொழுது தீட்டப்பட்டுள்ள இரண்டு ஆண்டுத் திட்டமும் கொடுக்குமோ, என்னவோ!

உணவின் நிலைமையையறிந்து, குறையை நிவர்த்தி செய்ய ஏற்ற திட்டமாக எதைக் கைக்கொள்வது என்பதிலே அக்கரை காட்டாமல், உணவு உற்பத்திப் பெருக்க வேண்டுமென்பதிலே தங்களுக்கு எவ்வளவு அக்கரை இருக்கிறதென்பதை 'வெளிப்பகட்டின்' மூலம் காட்டிக்கொள்ளவே இன்றைய ஆளவந்தார்கள் முனைந்துள்ளார்கள். 'வெளிப் பகட்டு' இருக்கும் அளவுக்கு 'விஷயவெளிச்சம்' அங்கு இருக்கக்காணோம்!

கவர்னர் ஜெனரல் தம் மாளிகைத் தோட்டத்தில் சோளம் பயிரிடுதல்—பவநகர் மன்னர் கும்பேனியார் தோட்டத்தில் மாஞ் செடி நடுதல்—சென்னை அரசியலார் ஜிம்கானா மைதானத்தை உழுது பயிரிடுதல் — பள்ளிக்கூடங்களைச் சேர்ந்த விளையாட்டு மைதானங்களில் விளைவைப் பெருக்கக் கட்டளையிடுதல்—சி. ஆர். உழுவதுபோல் படமெடுத்துக் கொள்ளுதல்-நேரு 'ட்ராக்டர்' மேல் உட்கார்ந்துகொண்டு புன்சிரிப்பு பூத்தல் ஆகிய இவைகளை உணவு உற்பத்தியின் அடையாளங்களாகக் காட்டிக்கொள்ள ஆசைப்படுகின்றனர் ஆளவந்தார்கள்! இத்தகைய 'வெளிப் பகட்டுகள்' ஏன்? இவைகளால் நாட்டிற்கு உருவான பலனேதும் ஏற்பட முடிகிறதா? இத்தகைய 'அற்ப' வெளிப்பகட்டு முறைகளைக் கையாண்டுதான் 'பெருமையை'ச் சம்பாதித்துக் கொள்ள வேண்டிய நிலைமையிலிருக்கிறதா இன்றைய காங்கிரஸ் அரசாங்கம்!

நீர்வளம், நிலவளம் நிறைந்த பல பகுதிகள் தென் மாவட்டங்களில், காடு கரம்புகளாகவே காட்சி யளிக்கின்றன. அவைகளை உடனடி முறைகளால் சாகுபடிக்குக் கொண்டுவரத் திட்டம் ஏதும் கொள்ளாமல், சென்னை நகரின் மத்திய பாகத்தில், மக்கள் மாலை வேளைகளில் ஓய்வு பெற என்று அமைந்திருக்கும் ஜிம்கானா மைதானத்தை உழுது பயிரிடத் திட்டம் போட்டிருக்கிறார்கள் இன்றைய சென்னை அரசியலார், என்றால், இது வெறும் பகட்டு அல்லாமல் வேறு என்னவாக இருக்க முடியும்.

மேலும் பல காலமாக நிலத்திலிறங்கி, உழுது, பயிரிட்டு, விளைவைப் பெருக்கி வந்த உழவர்களிடத்திலிருந்து நிலங்களைப் பிடுங்கி, காங்கிரஸ் 'தியாகி'களிடம் வழங்கப்பட்டுவிட்டதன் காரணமாக எவ்வளவோ நிலங்கள், போதுமான கவனஞ்செலுத்தப்படாத காரணமாகப் பாழ்பட்டுக்கிடக்கின்றன என்று ஆங்காங்கிருந்து அறிவிப்புகள் வருகின்றன. தங்களுக்குச் சாதகமாக இருந்தார்கள் என்ற காரணத்துக்காக, நிலங்கள், இந்த நாட்டில், 'லஞ்சமாக'—அவர்கள் சொல்லில் 'வீர மானயமாக' வழங்கப்படுகிறது, இந்நாட்டு ஆட்சியாளரால், எதையும் நிறைவேற்றக்கூடிய அதிகாரம் தங்களிடம் இருக்கிறது என்ற எண்ணத்தால்! உழைக்கும் கூட்டத்தாரிடத்திருந்து, பயன்தரும் நிலங்கள், பிடுங்கப்பட்டு, ஒன்றுக்கும் உதவாத கூட்டத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டால், அந்நிலங்களில் உற்பத்தி எப்படி மிகுந்து காணப்பட முடியும்.

உணவு உற்பத்திக்கென போடும் திட்டங்கள் நிறைவேறாமல் போவதற்குரிய காரணங்கள் எவை என்பதை உண்மை நிலையறிவுக் கண்கொண்டு பார்த்து, தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய உடனடி முறைகளைக் கையாள அரசாங்கம் முற்படவேண்டும்.

யாரிடத்தில் நிலம் விடப்பட்டால் விளைவும் பெருகி, தரிசு ஏற்படாமல் இருக்கும் என்பதை அறிந்து, அதற்கொப்ப, தரிசுபோடப்பட்டிருக்கும் நிலங்களைப் பங்கிட்டுக்கொடுக்க அரசாங்கம் முனையவேண்டும். மேனாட்டு விஞ்ஞானக் கருவிகளை வரவழைத்து விளைவைப் பெருக்கும் திட்டம் ஒரு பக்கம் நிறைவேற்றப்பட்டாலும், கூட்டுப் பண்ணை முறைகளால் உடனடியாக உணவுப் பொருள்களை உற்பத்தியாக்கும் முறையை அரசாங்கம் இப்பொழுதே வலியுறுத்த வேண்டும். நாட்டில் யாதொன்றுக்கும் பயன்படாமல் பாழ்பட்டுக்கொண்டிருக்கும் மனித உழைப்பை, உண்மையான வழியில், உண்மை எண்ணத்துடன் பயன்படுத்தி விளைவைப் பெருக்க வசதி செய்து தரவேண்டும். உணவுப் பொருளைப் பதுக்கி வைத்துக்கொண்டிருக்கும் கள்ளமார்க்கட் 'முதலைகளை'க் கண்டு பிடித்துத் தக்க தண்டனை அளிக்கவும் அரசாங்கம் அஞ்சாமலிருக்க வேண்டும்.

சென்னை ஜிம்கானா மைதானத்தை உழுது பயிரிடுவது போன்ற வெளிப்பகட்டுத் திட்டம் வேண்டாம்! வேண்டவே வேண்டாம்!

உணவு நெருக்கடியைத் தீர்க்க, வெறும் திட்டங்களே தீட்டிக்கொண்டிருப்பது மட்டும் போதாது! விளைவு திட்டம்! திட்டம்!! திட்டமாகவே!!! மட்டும் இருந்து விடக்கூடாது! விளைவு உணவாக, உறுபசி தொலைவதாக இருக்க வேண்டும்! அந்நிலை ஏற்படுமா?

## அங்கும் இங்கும்

பூமாவைச்சேர்ந்த பாப்வுட் அவுஸ், வுட்டி ஜாங்வார் என்னும் இருவர், ஒரு சிறு ஆகாய விமானத்தை 46 நாட்களுக்கு அதிகமாக விண்ணில் பறக்க விட்டுக் கொண்டு இருந்தார்களாம். 12—10—49-வரை தரையில் இறங்காமல் வானத்திலேயே இருப்பது என்று ஏற்கனவே திட்டமிட்டுக் கொண்டு இருந்தார்களாம். ஆனால், விமானத்திலிருந்த மின்சாரக்கருவி ஒன்று பழுதுபட்டு விடவே, தங்கள் முடிவிற்கு மாறாகக் கீழே இறங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டதாம்.

ஆகமொத்தம் 1124 மணி 18நிமிஷம் ஆகாயத்தில் இருந்திருக்கிறார்கள் இந்த இருவீரர்களும். இதுவரையில் இத்துறையில், 1000 மணிநேரம் தொடர்ந்து ஆகாயத்திலே இருக்க முடியும் என்று முன்னர் மெய்ப்பிக்கப்பட்டு இருந்ததாம்.

இது போன்றவீரர்கள்நமது நாட்டில்மட்டும் இல்லைஎன்று கருதுகிறீர்களா? ஓ! பேஷாக இருந்து இருக்கிறார்கள்!

நமது நாட்டில், ஆகாய விமானம் போன்ற எந்த இயந்திர சாதனத்தின் உதவியுமில்லாமல், வெறும் சொற்களின் பலத்தாலேயே விண்ணில் சஞ்சரித்து இருக்கிறார்கள் எத்தனையோ 'தேவர்கள்!' நாரதர், சதா சர்வகாலமும் அதே வேலையாக இருந்திருக்கிறார்!

திரிசங்கு என்ற, வசிஷ்டரின் சீடனைத்தான் எடுத்துக் கொள்ளுவோமே! சுவர்க்கம் (?) புகவேண்டுமென்று தன் குருவான வசிஷ்டரை வேண்ட, குரு மறுக்க, சீடன் கோபிக்க, குரு சாபங்கொடுக்க, சீடன் விஸ்வாமித்திரரைக் கண்டு கோரிக்கையை வெளியிட, திரிசங்கை சுவர்க்கம் புகக் கட்டளை இட, குருவின் சாபத்தால் சண்டாளனாக மாறிவிட்டிருந்த திரிசங்கைத் தேவர்கள் சுவர்க்கத்திலிருந்து தலைகீழாய் உருட்டித்தள்ள, திரிசங்கு கதறிக்கொண்டே கீழே விழ, இடை வெளியிலேயே 'இருக்க' என்று தன் தவவலிமை (?)யால் கட்டளையிட, திரிசங்கு இன்றும் ஒரு பெரும் பதம் கிடைத்துவிட்டதாகச் சொல்லுவார்கள்! இன்னமும் திரிசங்கு விண்ணிலேயே, எந்தவித இயந்திரத்தின் துணையும் இல்லாமல் நின்றுகொண்டு (?) இருக்கிறாரே, இதைக்காட்டிலுமா 46 நாள் விமானத்தில் விண்ணில் இருந்துவிட்டது ஆச்சரியப்படக்கூடியது? திரிசங்கு செய்யாததையா இந்த வெள்ளையர்கள் செய்துவிட்டார்கள்! என்னமோ பிரமாதப்படுத்துகிறார்களே, இந்த அற்பத்தை!

இது எப்போது நடந்தது? 1949-லா? இல்லையே! எத்தனையோ நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவல்லவா நடந்து இருக்கிறது! விமானம் ஏறிப் பறக்கிறவர்களை, விஸ்வாமித்ர வித்தையைச் செய்யச் சொல்லுங்கள் பார்ப்போம்!

## வாய்தா கேட்டு வழக்கின் காலத்தை வளர்க்கும் வக்கீல்கள்

ஈரோடு சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் இருந்த வழக்கொன்றிற்கு ஆஜராக வேண்டியிருந்த வக்கீல் தமக்கு வேறு கோர்ட்டில் வேலையிருந்த காரணத்தால் வழக்கை ஒத்திவைக்குமாறு கோரினார். சப்-மாஜிஸ்ட்ரேட் வழக்கை ஒத்திவைக்க மறுத்துவிட்டார். உடனே வழக்கையே அந்தக் கோர்ட்டிலிருந்து மாற்றிவிட ஹைக்கோர்ட்டில் மனுப் போடுவதாகக் கூறி வழக்கை ஒத்தி வைக்குமாறு செய்தார். சென்னை ஹைக்கோர்ட்டில் வழக்கை வேறு கோர்ட்டுக்கு மாற்றுமாறு வாதி மனுச் செய்து கொண்டார். இந்த மனுவை நீதிபதி ஏ. எஸ். பி. ஐயர் விசாரணை செய்தார். வழக்கு விசாரணைகளில் தாமதமேற்படுவது பற்றி மாஜிஸ்ட்ரேட்கள் கேள்வி கேட்கப்படும் நிலையிலிருக்கையில்வக்கீல்கள் தாங்களே எல்லா வழக்குகளிலும் தோன்றிப் பொருளீட்டுதல் வேண்டுமென்னும் நோக்கத்துடன் பல வழக்குகளை ஏற்றுக்கொண்டு, ஒன்றில் ஆஜராவதும், பிறவற்றை ஒத்திவைக்குமாறு செய்வதுமாக வழக்கு விசாரணைக் காலத்தை வளர்க்கின்றனர். இந்த வக்கீல்கள் பல வழக்குகளை ஒப்புக்கொண்டால், தங்கள் ஜூனியர்களையாவது அனுப்பி வழக்கை நடத்தச் செய்யவேண்டும். அல்லது தங்கள் நண்பர்களுக்காவது வழக்கைப் பிரித்துக் கொடுக்கவேண்டும். அங்ஙனமின்றி தாங்களே எல்லாவற்றையும் அடைந்துவிட வேண்டுமென்னும் பேராசையால் சில வக்கீல்கள் நடந்துகொள்ளும் முறை வழக்கு விசாரணைக் காலத்தை நீடிக்குமாறு செய்து விடுகிறது. வக்கீல் உடல் நலமற்றிருந்தாலோ, அல்லது வீட்டில் நெருக்கடி மிக்க சம்பவங்கள் நேர்ந்துவிட்டாலோ தான் வழக்கை ஒத்தி வைக்கக் கேட்கலாம். மற்றொரு கோர்ட்டில் வழக்கிருக்கிறதென்பதற்காகக் கூடாது என்னும் கருத்தை வெளிப்படுத்தி, இவ்வழக்கை வேறு கோர்ட்டுக்கு மாற்ற முடியாது என்று தீர்ப்புக் கூறிய நீதிபதி ஏ. எஸ். பி. ஐயர், வக்கீல்களின் போக்கை வன்மையாகக் கண்டித்தமைக்காக அவரைப் பாராட்டுகிறோம். உண்மையிலேயே வக்கீல்களின் இந்தப் போக்கினால் நீதிமன்ற நேரம் பாழாவது மட்டுமின்றி, மக்களின் பணமும் நேரமும் கூடப் பாழாகின்றன.

### நேர்மையான ஆசை

— — —

"நம்முடன் அன்பாக அளவளாவிவிட்டுப் போவதாக இருந்தால் பெரும் மகிழ்ச்சி. ஆனால் இப்படியில்லாமல், வேறு ஏதாவது காரணமிருந்தால், வரி கொடுக்கும் அமெரிக்கர்களுக்கு, அது விஷயம் இப்போதே தெரிந்தாகவேண்டும். வரி செலுத்துகிறவர்களின் ஏராளமான பணத்தை வாரி இரைத்துவிட்டு, பின்னர் சொல்ல வர வேண்டாம்.''

—நியூயார்க்டெய்லிநியூஸ்.

# பட்டாபியின் காங்கிரஸ் காலட்சேபம்

## தேர்தல் வாக்குறுதி தெளிவான வேலைத்திட்டமன்று—லட்சியமே

### "மக்கள் மதி ஒளி கேட்டால் மந்திரிகள் மெழுகுத்திரி ஒளி தருகின்றனர்"

அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைவரும் ராஷ்டிரபதியுமான பட்டாபி சீதாராமையா கான்பூரில் பத்திரிகை நிருபர்கள் மாநாட்டில் பேசியபோது மணிபோன்ற மொழிகள் சிலவற்றைக் கூறினர்.

1. இந்தி தேசியமொழியாக வேண்டும் என்னும் பிரச்னையை மெல்ல நழுவவிடும் போக்கு மத்திய அரசாங்க மந்திரிகளுடன் சிலர் மாட்டுக் காணப்படுகிறதென்பது உண்மையா என்று கேட்டதற்கு பட்டாபி பின்வருமாறு கூறினர்:—

"இந்தி மொழியை அறியாத தென இந்தியன், சட்டசபையில் இந்தியில் சொற்பொழிவாற்றுவதையோ, கேள்விகளுக்குப் பதில் அளிப்பதையோ எதிர்பார்க்க முடியாது. பலரும் கலந்த அந்தச்சபையில் இந்தி தேசிய மொழியாகும் பிரசனை கைந்நழுவ விடப்படும் போக்கு இருந்தேதான் தீரும். சட்டசபையில் உர்தூவிலோ, இந்தியிலோ பேசிவிட்டால், அவ்வளவும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தாக வேண்டிய தொல்லையை நீங்கள் அறிந்தில்லையா? மத்திய சட்டசபையில் ஆங்கிலத்திற்கும் இந்திக்குமிடையில் இந்தப் போராட்டம இருந்துவருகிறது. ஆனல், சென்னையில் இந்தப் போராட்டமானது இந்திக்கும நாட்டு மொழிகள நான்கினுக்குமிடையில் இருக்கிறது. எனவே, நாங்கள் நேரடியாக இந்தியைத் தேசிய மொழியாக நுழைத்துவிட முடியாது".

"என் உங்கள் ஐக்கிய மாகாணத்தையே பார்க்கலாமே! உங்கள் மாகாணத்தில் அரசாங்க நிலையத்திற்குள் நடைபெறும் சிறு கடிதப் போககுவாததுக்கள, நிர்வாகப பற்றிய குறிப்புக்கள் எழுதுதல் முதலியவைகளனைத்தும் இந்தியிலேயே எழுதப்பட வேண்டு மென்னும் முறையைச் சில அமைசசர்கள் புகுத்தினர்களே! அந்த உத்திரவு என்னயிற்று? ஒருவாரங்கூடச் சரியானபடி அந்த உத்திரவு நடைமுறையில் இலலாதவகையில், அதைக கைவிடவேண்டிய அவசியம வந்துவிட்டதே! இத்தனைககும ஐககிய மாகாணம் இந்தித் தனி மொழிககுரிய மாகாணமாகும; அமைசசாகளனைவரும் இந்தி மொழியறிந்தவர்கள. இப்படிப்பட்ட மாகாணத்தின் நிலைமையே இந்தக் கதிக்குள்ளானதென்றால், மததிய அரசாஙகத்தில் நாம இந்திப் பொதுமொழியை எஙஙனம் எதிர்பார்கக முடியும?"

பேஷ்! பட்டாபி! இப்போதேனும, இந்தி பொதுமொழியாக முடியாத மொழி, இந்தி பேசும் மாகாணத்திலேயே அது வெறறி பெற முடியாத மொழி என்பதை எடுத்துக காட்டத் துணிவு பெறறதற்காகவேனும் டாக்டர் பட்டாபியைப் பாராட்டத்தான் வேண்டும்!

தெரிந்தோ தெரியாமலோ பிரிட்டிஷ் காமன்வெல்துடன் இந்தியா இணைந்ததேன்? எனப் பத்திரிகை நிருபர்கள மறறொரு கேளவி கேட்டனர். அதற்குப் பட்டாபி கூறிய பதில் வருமாறு:—

"......பிரிட்டனுடன் நெடுநாட்களாக நாம கொண்டுள்ள தொடர்பையும், நமக்கு ஆங்கில மொழியில் உள்ள அழுத்தமான ஞானத்தையும், பிரிட்டிஷ் பழககவழககங்களில் நாம கொண்டுள்ள அழுத்தமான பறறினையும் நாம எளிதில் மறந்தோ, அசட்டைசெய்தோ விடுவதற்கில்லை. எனினும் தக்க வாய்ப்பு ஏற்படும்போது தன் விருப்பப்படி மாற இந்தியாவுக்கு எப்போதும் உரிமையுண்டு".

வெள்ளையரை விரட்டும் வீரத் தேசியவாதிகளுக்குப் பட்டாபியின் இந்த உண்மைக்கூற்று அர்ப்பணம். பிரிட்டனுடனுள்ள நீண்டகாலத் தொடர்பு, ஆங்கில மொழியறிவு, பிரிட்டிஷ் பழக்கவழக்கங்கள—இவை மூன்றும் எளிதில் கைவிட முடியாதவையாயின ஏகாதிபத்திய எதிரிகளுக்கு! ஏகாதிபத்திய தாசர்கள், பிரிட்டிஷ் பாதவருடிகள், பிரிட்டிஷ் குலாம்கள் என்ற சொற்றொடர்களைச் சிருஷ்டித்த தோழர் சத்திய மூர்த்தி உயிரோடு இருந்து தாம் சிருஷ்டித்தவை தமக்கேவாக இருப்பதை அறிய முடியாவிடினும் அவர் குழுவினர் உளளனர் உணர்ந்து மகிழ.

அடுத்த பொதுத் தேர்தலில் காங்கிரஸ் அரசாஙகஙகள், உருவான செயல்கள ஏதேனும செய்யவேண்டாமா? என்று நிருபர் மற்றொரு கேளவி கேட்டார். அதற்குப் பட்டாபி சீதாராமையா கூறிய பதில் வருமாறு:—

"கடந்த பொதுத் தேர்தலின் போது வெளியிட்ட திட்டஙகளையே காஙகிரஸ்காரர்கள் வரப்போகும் தேர்தலிலும் கூறினல் போதும். அதில் அவர்கள் சில வாக்குறுதிகளைக் குறிப்பிட்டிருந்தனர். அவற்றை நிறைவேற்றக் காஙகிரஸ்காரர்கள் முயல்கின்றனரா என்பதே இப்போது பெரும் பிரச்னையாயிருக்கிறது. வாக்குறுதிகள இலட்சியஙகளை அடிப்படையாகக் கொண்டவை ஆனல் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதென்பது அனுபவப்பூர்வமான வேலைகளைப் பொருத்திருக்கிறது. உஙகளுக்கு ஒன்று கூறுகிறேன். மக்கள சந்திர ஒளி வேண்டுமென்று கேட்கிறார்கள். மந்திரிகளோ மெழுகுவத்தி ஒளியைத்தான் காட்டுகின்றனர். நமமுடைய "வாககுறுதிகளையும வேலைத் திட்டஙகளையும நிறைவேற்றுவப்பதெனறல அதில் மிகப பெரும சங்கடங்களும தொல்லைகளும இருக்கின்றன"

கடைசியாக, டாக்டர் பட்டாபி மனந்திறந்து கூறிவிட்டார் காஙகிரஸ்காரர்களின் போக்கைப்பற்றி.

காஙகிரஸ்காரர்கள் தேர்தல் காலஙகளில் கொடுத்த வாக்குறுதிகள் என்பவை வெறும் லட்சியஙகளே. அதாவது நிறைவேற்ற முடியாதவைகளே. முடிந்தால், வாய்ப்பிருந்தால் எப்போதாவது நிறைவேறற முயற்சிக்கலாம் என்னும் கருத்துக் கபடமில்லாதபடியான வெறறுலட்சிய வார்த்தைகள் தாம். இப்படிப்பட்ட இலட்சிய வார்த்தைகளை வாக்குறுதிகளாகத் தேர்தல் காலஙகளில் வெளியிட்டு நாட்டு மக்கள் மயக்கப்பட்டிருக்கின்றார்கள், வஞ்சிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதில் தவறு இருகக முடியுமா?

மக்களை ஏமாற்றி, வஞ்சித்து, மயக்கி ஓட்டுபெறுவதற்காகவே, காஙகிரஸ்காரர்கள் தஙகளால் நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளையெல்லாம் தேர்தல்காலஙகளில் வெளியிட்டுள்ளார்கள் என்பதை டாகடர் பட்டாபி சீதாராமையர் மிகத்தெளிவாக விளககிவிட்டார். தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிப்பீடம் ஏறிவிட்ட பிறகு, அவ்வாக்குறுதிகளுள சில வற்றையேனும் அனுபவ பூர்வமாக நிறைவேறற முயற்சியாவது செய்கிறார்களா என்பதே கேளவிக்குரிய பிரசனை என்று தெளிவு படுததிவிட்டார் பட்டாபி. இது தான் காஙகிரஸ்கார்களின் உண்மையான உருவம. தேர்தல் காலஙகளில் இந்த உண்மையான உருவம பல வகை வேஷஙகளால் மறைககப்படும. வாககாளர்கள் இந்த வேஷஙகளைக் கண்டு மயஙகாதிருத்தல் வேண்டும். மயஙகினல்; இவ்வாறு வஞ்சிக்கப்படும் நிலைமைககாளாகி, இன்னும் பல்லாண்டுகள் பழைய பல்லவியைப்பாடிககொண்டிருப்பதைக் கேட்பவர்களாகக் கிடந்து உழல வேண்டியதுதான். டாகடர் பட்டாபியின உண்மை விளக்கம வாக்காளர்களின் உளளத்திற்கு விளக்கம் அளிககும என நமபுகிறோம்.

---

## இனி நடப்பவை

சின்ன காஞ்சீபுரம — இவ்வூர் திராவிட மறுமலர்ச்சிக்கழக 2-வது ஆண்டு விழாவும், திராவிட முன்னேற்றக கழகத் துவக்கவிழாவும 23—10—49. ஞாயிறு மாலை 4 மணிக்கு கழககட்டிடத்தின் எதிரில், தோழர் என். கே. ரஙகநாதன் தலைமையில் நடைபெறும. அவ்வமயம, தோழர்கள் சி. என். அண்ணாத்துரை எம். ஏ, கே. அனபழகன். எம். ஏ., சி. டி. டி. அரசு, ஏ. ஆர். வெஙகட்ராமன், தோழியர். சத்தியவாணிமுதது அம்மையார் ஆகியோர் சொறபொழிவாற்றுவர். எனத்தோழர் ஜி. எஸ். மணி (செயலாளர்) அறிவிக்கிறார்.

* * *

ஆற்காடு—22—10—49 மாலை 6 மணிக்கு இவ்வூர் (பெரியார்)மைதானத்தில், திராவிட முன்னேற்றக்கழகம்-ஆறகாடு கிளையின் துவக்க விழாப் பொதுக்கூட்டம் நடைபெறும். அது போது தோழர்கள் காஞ்சி. கல்யாணசுந்தரம், கே. ஏ. மதியழகன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

---

### "ஏமாறலாமா" என்று "ஏமாற்றலமா ?"

புதுவை. அக் 10—

நேற்று இவ்வூர் பிரஞ்சுக் கல்லூரித தமிழ்மாணவர் கழக முதலாண்டு விழா நடைபெற்றது பேராசிரியா அ சிதம்பரநாத செட்டியார்வராமையால. திரு ஒளவை. க துரைசாமிப்பிள்ளை தலைமை தாஙகினர்.

தாம் எடுத்துக்கொண்ட "ஏமாறலாமா?" என்ற தலைப்பை முடிவுரையில் பேசினர் தமது ஒரு மணிநே, முடிவுரையில் தலைப்பைத் தனியே விட்டு. கம்பராமாயண விரிவுரையை முக்கால் மணிநேரம பேசித் தீர்த்தார். தமிழ்மாணவர்களை ஏமாற்றினர் என்றே சொல்ல வேண்டும். கமபராமாயணமபோனற சுவை சொட்டும் கவிதைகள்தான் தேவை என்றும எளியநடைப பாடல்களைக் கண்டு ஏமாறலாகாது என்றும் பேசினா தம் போன்ற பண்டிதர்க்குப் பிழைப்பற்றுப போவதைக் கண்டஞ்சி கம்பராமாயணம் வேண்டும் என்று சப்பைக் கட்டுக் கட்டினர்-சில ஆண்டுகளின் முன "எளியநடைப் பாடல்கள் எனும் நச்சுக் காறறு வீசாமல் ஒழித்துக் கட்டவேண்டும" என்று அவர் பேசி. அதனைக் கவிஞர்பாரதிதாசன மறுததுப் பேசியதை மறந்து விட்டாரோ என மக்கள பேசிக்கொண்டனர். பகுத்தறிவொளி வீசும பல கலைக் கழகப பண்டிதா தமிழ மாணவர்க்கு உபதேசிக்கும முறையா இது? என்றும்,

ஏமாறலாமா? என்ற தலைப்பை வைத்துப பண்டிதா பள்ளி மாணவரை இஙஙனம் ஏமாற்றலாமா?

என்றும் மக்கள் கேட்டுக்கொண்டது குறிப்பிடத்தக்கது

(ந—சி)

---

## திராவிட முன்னேற்றக்கழக துவக்க விழாக் கூட்டங்கள்

### 18-10-49

உடுமலைப்பேட்டை:— சி. என். அண்ணாதுரை, எஸ். ஆர். சுப்பிரமணியம, பி. பழனிச்சாமி

பட்டுக்கோட்டை:— கே. கே நீலமேகம, என். வி. நடராசன், ஏ. வி பி. ஆசைததம்பி, இரெ. இளம் வழுதி, என். எஸ. இளங்கோ

கல்லிடைக்குரிச்சி:— காஞ்சி. கல்யாணசுநதரம்

### 19-10-49

திருவெறும்பூர் :— என. வி. நடராசன, ஏ. வி பி. ஆசைத்தமபி.

பல்லடம்:— மாலை 3-மணிக்கு — சி. என். அண்ணாதுரை, எஸ். ஆர். சுப்பிரமணியம், பி. பழனிசசாமி. ஜி. என. ராஜு

கருப்பூர்:— மாலை 7-மணிககு — சி. என். அண்ணாதுரை. எஸ.ஆர். சுபபிரமணியம, பி. பழனிச்சாமி; ஜி என. ராஜு

சங்கரன்கோவில்:— காஞ்சி. கலயாணசுந்தரம. எம். எஸ். ராமசாமி, கே. வி. கே. சாமி

திருச்சேறை :— ஈ. வெ. கி. சம்பத், எஸ், கே. சாமி

### 20-10-49

விருதாசலம் :— என. வி. நடராசன், எ. வி. பி. ஆசைத்தமபி

### 21-10-49

மன்னார்குடி:— ஈ. வெ. கி. சமபத், இராமாமிர்தத்தமமையார், எஸ. கே. சாமி

சென்னைமைலாப்பூர்:- இரா. நெடுஞ்செழிபன.

### 22-10-49

சிதம்பரம் — ஈ. வெ. கி. சமபத், இராமாமிர்தத்தமமையார், எஸ. கே. சாமி

ஆற்காடு :— காஞ்சி. கலயாணசுந்தரம், கே. ஏ. மதியழகன்

### 23-10-49

காஞ்சிபுரம்:— சி. என். அணணாதுரை, கே. அன்பழகன, சத்தியவாணிமுத்து. சி. டி. டி. அரசு, ஏ ஆர வெங்கட்ராமன்.

திருவாரூர்.— இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சமபத

திருவண்ணாமலை:— சி. பி. சிறறரசு, கே. ஏ. மதியழகன்.

கடலூர் (ஓ டி.) :— ஏ சித்தையன என. வி. நடராசன்

சுண்டக்காமுத்தூர்:— ஜி என. ராஜு

### 24-10-49

திருத்துறைப்பூண்டி:— ஈ. வெ. கி சம்பத்

### 25-10-49

கூடலூர் (மதுரை) :— ஏ. வி. பி ஆசைத்தம்பி

தியாகதுருக்கம் — என. வி நடராசன, ஏ. சித்தையன

### 26-10-49

தேனி:— ஏ வி. பி ஆசைத்தமபி

### 30-10-49

நாகப்பட்டினம் :— இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சமபத, இராமாமிர்தததம்மையார.

பவானி:— ரா இளஞ்செழியன

---

### திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்

திருச்சி, அக் 10—

9-10-49ஞாயிறு மாலை10 மணிக்கு இவ்வூர் 'கருணாநிதி பார்க்'கல் நடந்த கூட்டததில் திருச்சி திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம நிறுவப்பட்டு. செயற்குழுவொன்று அமைக்கப்பட்டது

செயலாளர்- ஏ. டி. அருணாசலம்; துணைச் செயலாளர்-எஸ். திருநாவுக்கரசு; நிதி உறுப்பினர்- என் இராமமூர்த்தி; விளம்பர உறுபபினர்- எம் பாலசுப். மணியம்; ஏனைய செயலுறுபபினர்கள்:— டி பாலகிருட்டினன், க. பாண்டியன. எஸ. கே சேகர், ந சண்முகம, எம் டி எம துரை. இராம தம்பரம், தி.வி கோ இராசன. செயலாளருக்கு செயற்குழுவை விரிவுபடுததிககொள்ளும் உரிமை அளிக்கபபட்டது. மேலும சில தீர்மானஙகள் நிறைவேறறப்பட்டு, கூட்டம் முடிவுற்றது. எனச் செயலாளர் எழுதுகிறார்.

### அழகிரி ஞாபகார்த்தக் கழகம்

தூத்துக்குடி, அக். 10—

இந்நகர் வடக்கூர், தளபதி கே. வி. அழகிரிசாமி ஞாபகார்த்தக் கழகக கட்டிடத்தில் ஷை கழக உறுப்பினர்கள் கூட்டமொன்று 9—10—49 காலை 10-30 மணிக்கு நடைபெற்றது. அதுபொழுது சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, ஷை கழகம் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இணைந்துபணியாற்றுவதென முடிவு செய்யப்பட்டது. பிறகு கீழ்ககண்ட செயலுறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:— லியோடாஸ்; பொருள் உறுப்பினர்:— எம். எஸ். சிவசாமி, விளம்பர உறுப்பினர் — எஸ். நடராஜன்.

ஏனைய செயலுறுப்பினர்கள்:— எம. ஆத்தி, வேலசாமி எம். பொன்னுசாமி, சுபபையா அருணாசலம. பின்பு செயலாளர் நன்றி கூறககூட்டம் இனிது முடிவுற்றது. எனசசெயலாளா எழுதுகிறார்.

# திராவிட முன்னேற்றக் கழகங்கள்

### நாரணமங்கலம்—சிற்றூர்க்கிளை

நாரணமங்கலம், அக். 10—

நாரணமங்கலம் (விஜயகோபால புரம்) தோழர் விஜயகோபாலன் அவர்கள் இல்லத்தில், தோழர் ச. மந்திராசலம் அவர்கள் தலைமையில் 9—10—49-ல் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தி. மு. கழகம் அமைக்க வேண்டிய அவசியம் குறித்துப் பல தோழர்கள் பேசினர். பின்பு "திராவிட முன்னேற்றக் கழகம்—நாரணமங்கலம் சிற்றூர்க் கிளை" நிறுவப்பட்டது. கூட்டத்திற்கு வந்திருந்தோரனைவரும தி. மு. க. உறுப்பினர்களாகத் தங்களைப் பதிவு செய்துகொண்டனர். பிறகு கீழ்க்கண்ட செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:— வி. எம். விஜய கோபாலன்; துணைச் செயலாளர்:- எம். செண்பகராச; பொருள் உறுப்பினர்:—ராமசாமி; விளம்பர உறுப்பினர்:—வி. கே. முத்தையன். ஏனைய செயற்குழுவினர்:—முத்துசாமி, எம்.கிருஷ்ணசாமி, அப்பாவு, முகம்மது நூறு, ரா. ஆதிமூலம், சி. தங்கவேலு, மந்திராசலம், வெங்கடாசலம், தோழியர்செண்பகராச. பின்பு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுத் தேனீர் விருந்துடன் கூட்டம் இனிது முடிந்தது. எனத் தோழர் வி. எம். விஜயகோபாலன் (செயலாளர்) வரைகிறார்.

* * *

### சென்னை சூளை—நகரஉட்கிளை

சென்னை, அக். 10—

சென்னை, சூளை வெங்கடாசல முதலித்தெரு 22 எண்ணுள்ள இல்லத்தில் சூளை திராவிடர் கழக செயற்குழுக் கூட்டம் 9-10-49 ல் நடைபெற்றது. தோழர் பால்வண்ணன் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். அதுபோது திராவிடர் கழகம் "திராவிட முன்னேற்றக் கழகம்—சென்னைநகர சூளை உட்கிளை" என மாற்றியமைக்கப்படுவதாகத் தீர்மானிக்கப்பட்டது. டை தீர்மானத்தை இருவர் தவிர மற்றையோரனைவரும் முழுமனதுடன் ஆதரித்தனர். பொது உறுப்பினர் கூட்டத்திலும் டை தீர்மானம் ஒப்புக் கொள்ளப்பட்டது. பின் புதிய செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

செயலாளர்:— பால்வண்ணன்; துணைச் செயலாளர்:— நாத்திச் சாமி; பொருள் உறுப்பினர்:— ம. இராசகோபால். மற்றைய செயலுறுப்பினர்கள்:— இ. பக்தவத்சலம், ஆ. கு. அண்ணாமலை, மு. தாமோதரன், கோ. சாரங்கபாணி. மேலும் இரு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள செயலாளருக்கு உரிமையளிக்கப்பட்டது.

தி. க. தலைவர் ஊரிலில்லாததாலும், கூட்டத்திற்கு வாராததாலும் துணைத்தலைவர் பால்வண்ணன் தலைமைவகித்ததை ஆதரித்து ஒரு தீர்மானம் நிறை வேற்றப்பட்டுக் கூட்டம் இனிது முடிந்தது. எனச் செயலாளர் எழுதுகிறார்.

* * *

### திருவரம்பூர்—சிற்றூர்க்கிளை

திருவரம்பூர், அக். 11—

இவ்வூர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம 9—10—49ல்தோழர் ஏ. பரமசிவம் அவர்கள் தலைமையில், கழககட்டிடத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு இவ்வூரிலுள்ள இயக்கத்தோழர்கள் சுமார் 200க்கு மேல வந்திருந்தனர். கழகம அமைக்க வேண்டிய இன்றியமையாமைக் குறித்துத் தோழர்கள் எஸ். நெடுமாறன், ஏ. கோவிந்தசாமி, சி. எஸ். ராஜு, சி. ராமையன், வேலாயுதம், கா. ந. தமிழரசன், ஆகியோர் பேசினர். பின்பு "திராவிட முன்னேற்றக் கழகம்-திருவரம்பூர்" அமைக்கப்பட்டுப் பின்வரும் செயற்குழுவினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

செயலாளர்:—வி.சொர்ணவேல்; துணைச்செயலாளர்:- ஜி. ராமசாமி, பொருள் உறுப்பினர்:—வி. வேலாயுதம், விளம்பர உறுப்பினர்:— கா. ந. தமிழரசன்.

ஏனைய செயற் குழுவினர்:— ஹமீத்கான், ஈசுப், பி. பொன்னுசாமி, வேலாயுதம், ஏ. பரமசிவம, சிவாநந்தம், நடராசன். எனத் தோழர் ஏ. கோவிந்தசாமி (தி, மு. க. பொதுக்குழு உறுப்பினர்) அறிவிக்கிறார்.

* * *

### சோமரசம் பேட்டை-சிற்றூர்க்கிளை

சோமரசம் பேட்டை, அக். 11—

இவ்வூர் டாக்டர் ஏ. ஜான் அவர்கள் மருத்துவ விடுதியில் 9-10-49 மாலை 6 மணிக்கு, இது வரை திராவிடர் கழக அனுதாபிகளா இருந்து வந்தத் தோழர்கள், தோழர் வ. எம். கணேசன் தலைமையில் கூடி திராவிடர் முன்னேற்றக் கழகம்—சோமரசம் பேட்டை சிற்றூர்க்கிளை அமைத்தனர். பிறகு சில தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டுக் கீழ்க் கண்ட செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—டாக்டர் ஏ.ஜான்; துணைச் செயலாளர்-வி. எம்.கணேசன்; பொருள் உறுப்பினர்-கே கோவிந்தராசன் ஏனைய செயலுறுப்பினர்கள் — எம். பெரியண்ணன், எஸ். எஸ். இரத்தினம், எஸ். சண்முகம், டி. எஸ். சாமிநாதன். எனத் தோழர் அ. ஜான் (செயலாளர்) அறிவிக்கிறார்.

* * *

### உத்திரமேரூர்-நகரக் கிளை

உத்திரமேரூர், அக். 10—

இவ்வூர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம தோழர் கே. எல் சுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபொழுது "திராவிட முன்னேற்றக் கழகம் - உத்திரமேரூர் நகரக்கிளை" நிறுவப்பட்டுச செயற்குழு வொன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்:— கே. எல். சுந்தரம்; பொருள் உறுப்பினர் :— ந. ராதாகிருஷ்ணன்; விளம்பர உறுப்பினர்:—வி. வேணுகோபாலன். ஏனைய செயற்குழு உறுப்பினர்:— என். பி. வரதராசன், எஸ். கண்ணப்பன், ஏ. எம. ராதாகிருஷ்ணன், ஆர். சுலைமான் கான். என். சீனிவாசன், கே. ராதாகிருஷ்ணன். பிறகு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் இனிது கலைந்தது. எனத் தோழர் கே. என். ராதாகிருஷ்ணன் தெரிவிக்கிறார்.

* * *

### தூத்துக்குடி—நகரக்கிளை

தூத்துக்குடி, அக். 11—

இந் நகர திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் தோழர் எஸ். நீதிமாணிக்கம் அவர்கள் தலைமையில் 9—10—49 அன்று இவ்வூர் ரிஜேன் தேகப்பயிற்சிக் கழகத்தில் நடைபெற்றது. பெருவாரியான கழகத் தோழர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர். கூட்டத்தின் நோக்கம பற்றித் தோழர்கள் கே. வி. கே. சாமி, எம். சிவசாமி, இரா. சு. தங்கப்பழம். அய்யாசாமி, ஆ. வேலாயுதம் ஆகியோர் பேசியபின் "நகர திராவிடர் கழகம்" "திராவிட முன்னேற்றக் கழகம் — தூத்துக்குடி நகரக்கிளை" என மாற்றியமைக்கப்பட்டது. என்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. பின்பு தோழர் கே. வி. கே. சாமி செயற்குழுத் தேர்தலை நடத்திவைத்தார்.

செயலாளர்- இரா. இராமலிங்கம்; துணைச் செயலாளர்- து. இரத்தினம்; நிதி உறுப்பினர்- கே. வெற்றிவேல்; விளம்பர உறுப்பினர்- எஸ். என். ராஜன். நகரத் திராவிடர் கழகத்தில் உள்ள தளவாடப் பொருள்களையும், நிதியையும், தி. மு. கழகத்தின் நகரக்கிளைக்கு மாற்றுவதாகவும், இன்னும் சில தீர்மானங்களும் நிறைவேறறப் பட்டன. எல்லா தீர்மானங்களும் எவ்வித எதிர்ப்புமின்றி முழுமனதோடு நிறைவேற்றப்பட்டன. ஏனைய செயலுறுப்பினர்களும தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர்கள் அனைவரும உணர்ச்சியோடும், உற்சாகத்தோடும் கூட்டத்தில் கலந்துகொண்டனர். எனதோழர் இரா. இராமலிங்கம் செயலாளர் எழுதுகிறார்.

* * *

### உள்ளிக்கோட்டை—சிற்றூர்க்கிளை

உள்ளிக்கோட்டை, அக். 12—

இவ்வூர் தோழர் ஜி. பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் அன்னார் இல்லத்தில் 11-10-49 அன்று நடைபெற்றக் கூட்டத்தில் இவ்வூர் திராவிடர் கழகம் 'திராவிட முன்னேற்றக் கழகம்—உள்ளிகோட்டை சிற்றூர்க கிளை" என மாற்றியமைக்கப்பட்டுப் புதிய செயற்குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்- கோ. அருணாசலம்; துணைசெயலாளர்- சி. கோவிந்தசாமி; பொருள் உறுப்பினர்- வி. இராமகிருட்டினன்; விளம்பர உறுப்பினர்கள்:— எஸ். சிங்காரவேலு, என் இராமச்சந்திரன். ஏனைய செயற்குழுவினர்கள:— பி. கோபால்சாமி, டி. மாரியப்பா, வி. இராமலிங்கம், கே. சுப்பிரமணியன், எஸ். குப்புசாமி. பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு கூட்டம் முடிவுற்றதெனத்தோழர் சிங்காரவேலு (வி. உறுப்பினர்) தீட்டுகிறார்.

* * *

### சென்னை பெரம்பூர்—நகரஉட்கிளை

பெரம்பூர், அக. 12—

சென்னை, பெரமபூர் திராவிடர் கழக உறுப்பினர்களும, ஆதரவாளர்களும் 9-10-49 ல் கழக இல்லத்தில் தோழர் இறைவன் அவர்கள் தலைமையின் கீழ்க்கூடி, "திராவிட முன்னேற்றக் கழகம்—சென்னை நகர பெரம்பூர் உட கிளை" அமைத்தனர். கீழ்க் கண்ட செயறகுழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—வே. தணிகாசலம்; துணைச் செயலாளர்:-ஏ. பி. சம்பத்; பொருள் உறுப்பினர்:—தே. சே. சானகிராம்; விளம்பர உறுப்பினர் இறைவன். ஏனைய செயறகுழுவினர்:— வி. எஸ். பத்ரகிரி, எஸ். வி. எஸ். ராவ், எஸ். கே. சாமி, கூத்தரசன், கபிலன். எனத் தோழர் இறைவன் (வி. உறுப்பினர்) எழுதுகிறார்.

---

## திராவிட முன்னேற்றக் கழகம் ஏழுகிணறு கிளை

### துவக்க விழா

சென்னை, அக். 10—

சென்னை ஏழுகிணறுதிராவிட முன்னேற்றக் கழக உட்கிளையின் துவக்கவிழா. நேற்று மாலை 6-மணிக்கு ஆனைக்காரன் தெரு மைதானத்தில மிகச் சிறப்பாக நடந்தேறியது. பெருந்திரளான மக்கள் கூட்டத்திறகு வந்திருந்தனர்.

தோழியா சத்தியவாணிமுத்து அவர்கள் தலைமை வகித்தார்கள். தோழர்கள காஞ்சி கல்யாணசுந்தரம், இரா. நெடுஞ்செழியன் ஆகிய இருவரும், தி. மு கழகத் தோற்றத்தின் காரணத்தையும், நோக்கத்தையும் விளக்கிச் சொற்பொழிவாற்றினர்கள் செயலாளர் நன்றிகூற கூட்டம் இரவு 8-30 மணிக்கு இனிது முடிந்தது. (ந. சி.)

---


## "மாலை மணி"

### 20—10—49 முதல்

### அதிகப் பக்கங்களோடு வெளிவரும்

## விலை அணா ஒன்று

ஏஜண்டுகளுக்கு ;— "மாலை மணி" ஏஜண்டுகள் 20—10—49 (சென்னை) 21—10—49 (வெளியூர்) முதல் "மாலை மணி" பிரதி ஒன்று, ஒரு அணா வீதம விற்கவேண்டும். ஏஜண்டுகள் தேவைக்குரிய பிரதிகளுக்கு 18—10—49-க்குள் தெரிவித்துக்கொள்வதுடன், பிரதி ஒன்றுக்கு ரூ 2—8—0 வீதம் முன்பணம் அனுப்பவேண்டும்.

சந்தாத் தோழர்களுக்கு:—"மாலை மணி" சந்தாதாரர்கள், தாங்கள் அனுபபியுள்ள சந்தா தொகைக்குரிய பத்திரிகைகள் மட்டும், 20—10—49 முதல் அனுப்பபபடும். தொடர்ந்து குறிப்பிட்ட காலம் வரையில் பத்திரிகை அனுபபப்படவேண்டுமானல், அதற்குரிய அதிகப்படியான தொகையை அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

—மானேஜர்.


---

### திராவிட முன்னேற்ற மாணவர் கழகம்

திருப்பூர், அக். 2—

திருப்பூர் திராவிட முன்னேற்ற மாணவர் கழகம், இன்று மாலை 7-30 மணிக்கு தோழர் பெத்தாம் பாளையம். பழனிச்சாமி அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டது கீழ்க்கண்டபடி செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டு, பல தீர்மானங்கள் நிறைவேற்றத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

செயலாளர்:—ஏ. அரசு. துணைச செயலாளர்:—எம். என். அண்ணா. பொருள் உறுப்பினர்:—க. ச. சுந்தரம். விளம்பர உறுப்பினர்:— முக்கண்ணன்.

ஏனைய செயற்குழுவினர்:— தி. மயிலழகன், தி.அ. இராமசாமி, இ. வேலுதாசன், எஸ். ஜெகந்நாதன், மு. ப. இராமசாமி, க. சண்முகசுந்தரம், சி. சுந்தரம், வி. சுவாமிநாதன், டி. வி. இராசு, சீனிவாசன், இரத்தினம். எனத் தோழர் அரசு (செயலாளர்) அறிவிக்கிறார்.

---

### பாரதிதாசன் படிப்பகம் திறப்பு விழா

சென்னை (சிதம்பரம் நகர்) அக். 2—

இன்று காலை 10 மணிக்கு சிதம்பரம் நகர் 10 எண்ணுள்ள இல்லத்தில் "பாரதிதாசன் படிப்பகம்" திறப்பு விழா நடைபெற்றது. தோழர். பு. அ. சசிசேகரன் "தற்கால கவிகள்" என்பது பற்றிப் பேசினர். செயலாளர், இப்படிப்பகம் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரித்துப் பணியாற்றுமெனப் பேசினர்.

பின்பு கீழ்க்கண்டவாறு செயற்குழுவொன்று அமைக்கப்பட்டது.

செயலாளர்:— ஆ. மாணிக்கராசன். பொருள் உறுப்பினர்:— கு. ச. சந்திரசேகரன். விளம்பர உறுப்பினர்:—ந. பத்மநாபன். மற்ற செயற்குழுவினர்:-ந. செ. இ. ராமச்சந்திரன், இரா. செந்தாமரைக் கண்ணன், ரா. இராதாக்கிருட்டிணன், க. பத்மநாபன், தி. ச. செல்வன், பாலசுப்பிரமணியன்.

செயலாளர் நன்றி கூற விழா இனிது முடிந்தது. எனத் தோழர் ந. பத்மநாபன் (வி. உறுப்பினர்) அறிவிக்கிறார்.

---


## ஏஜெண்டுகள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களுக்கு 'மாலைமணி' விற்பனை செய்ய முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை.

பாப்பாநாடு, கரூர், தேனி, வேலூர், நன்னிலம், ஜோலார்பேட்டை

—மானேஜர்


---

### பாரதி விழா

பெண்ணாகடம், அக். 7—

குடந்தைத் தமிழ்ச் சங்கம், சிவகுருநாதன் கழகம. ஆகிய இக்கழகங்களின் சார்பில் 3—10—49 திங்கட்கிழமை மாலை 6மணிக்கு 'பாரதி திடலில்' தோழர் கனகசபை பி ஏ. பி. டி.. அவர்கள் தலைமையில் "பாரதிவிழா" நடைபெற்றது.

தலைவர் முகவுரைக்குப் பின், குடந்தை அரசினர் கல்லூரி தமிழ் விரிவுரையாளர் தோழர், வித்துவான் எ. கிருட்டினமூர்த்தி பி. ஓ. எல்., அவர்கள 'தமிழுலகில் பாரதி' என்னும பொருள்பற்றி சொற்பொழிவாற்றுகையில், பாரதி எளிய இனிய தமிழ நடையில் ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்ட பாடல்களைப் புதியமுறையில் புனைந்து மக்களைக் கவர்ந்தார் என்றும, அவருக்கு மணி மண்டபங்கள் அமைபபதைவிட அவரது எண்ணங்களை நிலைநாட்ட வேண்டிய செயலகளை ஆற்றவேண்டும என்றும், பாரதியை எண்ணும்தோறும் அவர் வழி வந்த பாரதிதாசன் போன்றவர்களையும், கப்பல் ஓட்டிய தமிழன வ உ சி. யையும போறறவேண்டும என்றும் கூறினர்.

பின்னர் புலவர் இ. சிவப்பிரகாசன், புலவர் பஞ்சாட்சரம், தோழர் வேலாயுதனர் முதலியோர் பாரதியாரின் தொண்டினைப்பற்றி சொற்பொழிவாறறினர்கள்.

பின்னர் சில தீர்மானங்கள் நிறைவேறறபட்டு கூட்டம் இனிது முடிவுற்றது, எனத் தோழர் சிவ பழமலை தெரிவிக்கிறார்.

---

### திராவிட முன்னேற்ற இளைஞர் கழகம்

திருப்பூர். அக். 2—

இவ்வூர். திராவிட முன்னேற்ற இளைஞர் கழகக்கூட்டம் இன்று மாலை 5 மணிக்கு தோழா எ. பி. சாமி தலைமையில நடை பெற்றது. கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளா:- பால்ராசு; துணைச் செயலாளர்:-ஏ. அரசன்; பொருள் உறுப்பினா:-ஏ. பி சாமி; விளம்பர உறுப்பினர்:-எம. என். அண்ணா. ஏனைய செயற் குழுவினர்:-டி. நடராசன்; கே எஸ். அப்துல் காதர், ஏ. சுந்தரம, கே. பி. செல்வன், க, சுப்பிரமணியன், சு. முக்கண்ணன். டி. யூ. பி. அப்பன், க. வேலுசாமி, வேலுதாசன், வை. அரசு, டி. ஆர். இராமசாமி, க. ச. சுந்திரம், எம பி, இர மசாமி சில தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டு நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது

மீண்டும் இரவு 9 மணிக்கு செயற்குழுக் கூட்டம் ஒன்று கூடி பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. எனசெயலாளர் அறிவிக்கிறார்.

---


### அறிவிப்பு

ரெஜின முட்டை பவுடர், முட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கி அயர்ந்த நித்திரை தருகிறது. சாம்பிள் டின் 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும். G. பழனியப்ப முதலியார், மதுரை


Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.